## த.வெ.க. அரசுக்கு எதிராக - நாகை கடற்கரையில்

# திதி கொடுத்து விவசாயிகள் நூதன போராட்டம்!



நாகை,ஜூலை 6-

நாகை கடற்கரையில் தவெக அரசுக்கு எதிராக விவசாயிகள் திதி கொடுத்து நூதன போராட்டம் நடத்தினர். தமிழக விவசாயி கள் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற பயிர் கடன் முழுமையாக ரத்து செய்யப்படும் என்று தவெக தலைவர் விஜய் தேர்தல் வாக்குறுதியில் அறிவித்திருந்தார். தேர்தல் முடிந்து விஜய் முதல்வராக பொறுப்பேற்று விட்டார். ஆனால் சொன்ன வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. ரூ.75,000 வரை பெற்ற பயிர்கடன் மட்டும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதனால் அதிருப்தியடைந்த விவசாயிகள் டெல்டா மட்டுமின்றி தமிழகம் முழுவதும் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக பயிர் கடன் முழுமையாக ரத்து செய்யப்படும் என்ற அறிவிப்பு இறந்து விட்டது என்று கூறி நாகை புதிய கடற்கரையில் தமிழக காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் சார்பில் திதி கொடுக்கும்நூதன போராட்டம் இன்று காலை நடந்தது.மாநில கொள்கை பரப்பு செயலாளர் தமிழ்ச் செல்வன் தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் விஜயராஜ், மாவட்ட செயலாளர் சக்திவேல் முன்னிலை வகித்தனர். விவசாயிகள் கடற்கரையில் இறந்தவர்களுக்கு செய்வது போல் திதி கொடுத்தனர்.

தேர்தல் அறிக்கையில் கூறியவாறு கூட்டுறவு சங்கங்களில் விவசாயிகள் பெற்ற பயிர் கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும். மேகதாதுவில் கர்நாடக அரசு அணை கட்டும் முயற்சியை ஒன்றிய, மாநில அரசு வேடிக்கை பார்க்க கூடாது என்றும் கோஷங்கள் எழுப்பினர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது.

## ஆலந்தூரில் பாலியல் புகாரில் கைதான

# த.வெ.க. நிர்வாகி அரசு நிகழ்ச்சியில் பங்கேற்பு!

சென்னை, ஜூலை 6-

ஆலந்தூரில் நடந்த மக்கள் குறை தீர்க்கும் முகாமில் ஹரிஷ் எம்எல்ஏ மனுக்கள் பெற்றார். அப்போது, பாலியல் புகாரில் சிக்கி, தவெக பொறுப்பிலிருந்து நீக்கப் பட்ட நிர்வாகியும் அரசு நிகழ்ச்சியில் பங்கேற்றதால் சலசலப்பு ஏற்பட்டது. சென்னை மாநக ராட்சி, ஆலந்தூர் 12வது மண்டலத்திற்குட்பட்ட பொது மக்களுக்கான குறை தீர் முகாம், ஆலந்தூர் புது தெருவில் உள்ள முதல்வர் திருமண மண்டபத்தில் நேற்று நடந்தது. ஆலந்தூர் மண்டல உதவி கமிஷனர் முருகதாஸ் தலைமை வகித்தார். செயற்பொறியாளர் மணிமொழி, உதவி வருவாய் அலுவலர் கண்ணன் முன்னிலை வகித்தனர்.

இந்த முகாமில், ஆலந்தூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஹரிஷ் கலந்து கொண்டு பொதுமக்களின் குறைகளை மனுக்களாக பெற்றார். இதில் புதிய ரேஷன் கார்டு, பட்டா மாற்றம் கேட்டும், கூடுதல் வரி உயர்வை குறைக்க கோரியும், பழவந்தாங்கலில் குளம் ஆக்கிரமிப்பு, எம்.கே.சாலை நடை பாதை ஆக்கிரமிப்புகளை அகற்ற கோருவது உள் ளிட்ட 200க்கும் மேற்பட்ட மனுக்களை பொதுமக்கள் கொடுத்தனர்.

அப்போது அண்மை யில் பாலியல் புகாரில் கைது செய்யப்பட்டு ஜாமீ னில் வெளிவந்த வேம்புலி என்பவரும் உடனிருந்தார். பாலியல் புகாரால் கட்சி பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டவர் எப்படி அரசு நிகழ்ச்சியில் பங்கேற்கலாம் என கேட்டு த.வெ.க.வினரிடையே சலசலப்பு ஏற்பட்டது.மேலும் இந்த குறைதீர் நிகழ்ச்சிக்கு உள்ளாட்சி அமைப்பை சேர்ந்த ஆலந்தூர் மண்டல குழு தலைவர், மாமன்ற உறுப்பினர்கள், யாருக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை என கூறப்படுகிறது.

## மும்பை தண்ணீரில் மிதக்கிறது!

# இடைவிடாத மழையால் மகாராஷ்டிராவில் 5 பேர் உயிரிழப்பு!

## பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை!

மும்பை, ஜூலை 6-

மும்பையில் இடைவிடாது பெய்து வரும் பலத்த மழை காரணமாக, ஏற்பட்ட விபத்து களில் சிக்கி 5 பேர் உயிரிழந்தனர்.

மகாராஷ்டிர மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் தென்மேற்கு பருவ மழை தீவிரமடைந்துள்ளது. தலைநகர் மும்பை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் நேற்று முதல் கனமழை பெய்து வருகிறது.

இதைத் தொடர்ந்து இந்திய வானிலை ஆய்வு மையம் மும்பை, தானே, பால்கர் மற்றும் ராய்காட் ஆகிய கடலோர மாவட்டங்களுக்கும், புனே, சதாரா மலைப்பகுதிகளுக்கும் அதிதீவிர மழைக்கான 'ரெட் அலர்ட்' எச்சரிக்கையை விடுத்துள்ளது. இப்பகுதிகளில் வரும் 7ம் தேதி வரை கனமழை நீடிக்க வாய்ப்புள்ளதாக வானிலை மையம் கணித்துள்ளது.

கடந்த 4 நாட்களில் மட்டும் மழை மற்றும் மழையினால் ஏற்பட்ட பல்வேறு விபத்துகளில் மும்பை, தானே, புனே ஆகிய பகுதிகளில் 5 பேர் உயிரிழந்துள்ளனர். நேற்று பெய்த பலத்த மழை காரணமாக நகரின் பல்வேறு பகுதிகளில் வெள்ள நீர் தேங்கியது. இதனால் மும்பையின் பல்வேறு பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டது. தாழ்வான பகுதிகளான தாதர், பரேல், ஹிந்த்மாதா, அந்தேரி, கோரேகான் ஆகிய இடங்களில் கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு போக்குவரத்து முற்றிலு மாக முடங்கியுள்ளது. தஹிசர் மற்றும் கந்தர்படா இடையே ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக மும்பை மெட்ரோ 2ஏ ரயில் சேவைகள் சுமார் 90 நிமிடங்கள் வரை பாதிக்கப்பட்டன. மழை, வெள்ளம் காரணமாக மும்பை புறநகர் ரயில்களும் வழக்கமான நேரத்தை விட தாமதமாகவே இயக்கப்பட்டு வருகின்றன.

தென்மேற்கு மழை தீவிரமடைந்துள்ள நிலையில், அரபிக் கடலில் மணிக்கு 50 முதல் 60 கிலோ மீட்டர் வேகத்தில் பலத்த சூறாவளிக்காற்று வீசக்கூடும் என எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. இதனால் மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என எச்சரிக்கை விடப்பட்டு உள்ளது.

முதல்வர் வேண்டுகோள்

இதனிடையே, வானிலை ஆராய்ச்சி மையத்தின் அறிவிப்புகளை பொதுமக்கள் பின்பற்ற வேண்டும் என்று முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

## மீண்டும் இசட் பாதுகாப்பு!

# லாலு பிரசாத், ராப்ரி தேவிக்கு வழங்கியது பீகார் அரசு!

பாட்னா, ஜூலை 6-

பிஹார் முன்னாள் முதல்வர்களான லாலு பிரசாத் யாதவ், ராப்ரி தேவி ஆகியோருக்கு 'இஸட்' பிரிவு பாதுகாப்பை அம்மாநில அரசு அதிகாரபூர்வமாக வழங்கியுள்ளது.

லாலு பிரசாத் யாதவ் மற்றும் அவரது மனைவி ராப்ரி தேவி ஆகியோருக்கு வழங்கப்பட்டிருந்த இஸட் பிளஸ் பாதுகாப்பு கடந்த மாதம் திரும்பப் பெறப்பட்டது. இதையடுத்து, அவர்களுக்கு பாதுகாப்பு அளித்து வந்த காவல் துறையினர், எண்.10, சர்குலர் சாலை, பாட்னா என்ற முகவரியில் உள்ள அவர்களின் அரசு பங்களாவில் இருந்து வெளியேறினர்.

அத்துடன், அந்த பங்களா அமைச்சர் நந்த கிஷோர் ராமுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதால், ஹார்டிங் சாலையில் புதிதாக ஒதுக்கப்பட்டுள்ள மாற்று இல்லத்துக்குச் செல்லுமாறும் ராப்ரி தேவிக்கு மாநில அரசு உத்தரவிட்டிருந்தது. எனினும், ராப்ரி தேவி தான் வசித்து வரும் பங்களாவை இன்னும் காலி செய்யவில்லை.

இந்நிலையில், முக்கிய பிரமுகர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதை உறுதிப்படுத்தும் மாநில பாதுகாப்புக் குழுவின் பரிந்துரையின் பேரில் லாலு பிரசாத் யாதவ் மற்றும் ராப்ரி தேவி ஆகிய இருவருக்கும் இஸட் பிளஸ் பாதுகாப்பை பிஹார் அரசு மீண்டும் வழங்கியுள்ளது. இதன்மூலம், இரு தலைவர்களுக்கும் குண்டு துளைக்காத பிரத்யேக வாகனம் மற்றும் சிறப்பு படை பாதுகாப்பு அளிக்கப்படும்.

## த.வெ.க.வில் இணைந்த அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்

# சி.விஜயபாஸ்கருக்கு எதிரான குட்கா வழக்கு! 12 வாரங்களில் முடிக்க வேண்டும்!

## சென்னை உயர்நீதிமன்றம் அதிரடி உத்தரவு!

சென்னை, ஜூலை 6-

'முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர், முன்னாள் சென்னை மாநகர காவல் ஆணையர் எஸ். ஜார்ஜ் உள்ளிட்டோருக்கு எதிரான குட்கா முறைகேடு வழக்கை 12 வார காலத்துக்குள் விசாரித்து முடிக்க வேண்டும்' என சிறப்பு நீதிமன்றத்துக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் தடை செய்யப்பட்ட குட்கா உள்ளிட்ட புகையிலைப் பொருட்களை சட்டவிரோதமாக விற்பனை செய்ய கோடிக்கணக்கில் லஞ்சம் பெற்றுள்ளதாக வருமான வரித் துறை அளித்த அறிக்கையின் அடிப்படையில் முன்னாள் அமைச்சர்களான பி.வி.ரமணா, சி.விஜயபாஸ்கர், சென்னை காவல்துறை முன்னாள் ஆணையர் எஸ். ஜார்ஜ், முன்னாள் டிஜிபி டி. கே.ராஜேந்திரன் உள்ளிட்ட 26 பேர் மீது சிபிஐ வழக்குப்பதிவு செய்தது.

இந்த வழக்கு விசாரணை, எம்.பி, எம்எல்ஏக்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது. சிறப்பு நீதிமன்றத்தில் மனு இந்நிலையில், இந்த வழக்கில் விசாரணை அதிகாரியிடம் வாக்குமூலம் அளிக்காத பலர் நீதிமன்ற விசாரணைக்கு சாட்சிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர். எனவே அவர்களை சிபிஐ தரப்பு சாட்சிகள் பட்டியலில் இருந்து நீக்க வேண்டும். அல்லது அனைத்து சாட்சிகளின் வாக்குமூலங்களின் நகல்களை வழங்க உத்தரவிட வேண்டும் என்று சென்னை காவல்துறை முன்னாள் ஆணையர் ஜார்ஜ் தரப்பில் சிறப்பு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கோரிக்கையை ஏற்க மறுப்பு: இந்த மனுவை சிறப்பு நீதிமன்றம் தள்ளுபடி செய்ததை எதிர்த்து, ஜார்ஜ் தரப்பில், சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது. இந்த மனுவை விசாரித்த நீதிபதி ஜி.கே.இளந்திரையன், "குட்கா முறைகேடு வழக்கில் மொத்தம் 278 சாட்சிகள் வழக்கில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில், சில சாட்சிகளின் வாக்குமூலங்கள் முறையாகப் பதிவு செய்யப்படவில்லை.

பதிவு செய்யப்பட்ட சாட்சிகளின் வாக்குமூலங்கள் மனுதாரருக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரரின் கோரிக்கையை ஏற்க மறுத்து சிறப்பு நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில் எந்த தவறும் இல்லை என்பதால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. இந்த குட்கா முறைகேடு வழக்கை சிறப்பு நீதிமன்றம் 12 வார காலத்துக்குள் விசாரித்து முடிக்க வேண்டும்" என உத்தரவிட்டுள்ளார்.

# "உயிருக்கு ஆபத்து" வழக்கை வாபஸ் வாங்க சொல்லுறாங்க!

## அமைச்சர் மரிய வில்சன் மீது சகோதரர் மரியா கிளோது அதிரடி குற்றச்சாட்டு..!



சென்னை, ஜூலை 6-

தமிழக வெற்றிக் கழக அமைச்சர் மரிய வில்சனின் சகோதரர் மரிய கிளோது, தங்களின் உயிருக்கு ஆபத்து இருப்பதாகப் பரபரப்பான குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அமைச்சர் மரிய வில்சன் தரப்பில் இருந்து தங்களுக்கு எதிரான வழக்கைத் திரும்பப் பெறுமாறு தொடர்ந்து கடுமையான அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருவதாக அவர் கூறியுள்ளார். இத்தகைய அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும், தாங்கள் எக்காரணத்தைக் கொண்டும் வழக்கிலிருந்து பின்வாங்கப் போவதில்லை என்று அவர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, தனது சகோதரரான மரிய கிளோதுவின் வீட்டுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியதாக அமைச்சர் மரிய வில்சன் மீது ஒரு வழக்கு தொடரப்பட்டிருந்தது. இந்த வழக்கு நேற்று நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோது, அமைச்சர் மரிய வில்சன் ஆஜராகவில்லை. இதனைத் தொடர்ந்து, இந்த வழக்கின் அடுத்தகட்ட விசாரணையின் போது அமைச்சர் மரிய வில்சன் நீதிமன்றத்தில் கட்டாயமாக ஆஜராக வேண்டும் என்று நீதிமன்றம் அதிரடி உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

அமைச்சர் தரப்பிலிருந்து கொடுக்கப்படும் தொடர் அழுத்தங்கள் மற்றும் உயிருக்கு இருக்கும் ஆபத்து குறித்தான இந்த விவகாரம், தவெக அரசு வட்டாரத்திலும் பொதுமக்கள் மத்தியிலும் தற்பொழுது பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. நீதிமன்ற உத்தரவுக்குப் பிறகு இந்த வழக்கில் அடுத்து என்ன நடக்கப் போகிறது என்ற எதிர்பார்ப்பும் அதிகரித்துள்ளது.

# சகோதரரை வீடு புகுந்து தாக்கிய வழக்கு!

## விசாரணைக்கு த.வெ.க. அரசின் நிதியமைச்சர் மரியவில்சன் ஆஜராகவில்லை!

புதுச்சேரி, ஜூலை 6-

சொத்து பிரச்சினையில் சகோதரை வீடு புகுந்து தாக்கிய வழக்கில், தமிழக நிதியமைச்சர் மரிய வில்சன் புதுச்சேரி நீதிமன்றத்தில் நேற்று ஆஜராகவில்லை. இதையடுத்து வரும் 10ம் தேதி கட்டாயம் ஆஜராக வேண்டும் என நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

தமிழக வெற்றிக் கழகம் சார்பில், ஆர்.கே.நகர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மரிய வில்சன் நிதியமைச்சராக பதவி வகித்து வருகிறார். இவரும், இவரது தந்தை நெஸ்டோர் ஆகிய இருவரும் சொத்து பிரச்சினை காரணமாக கடந்த 2022ம் ஆண்டு ஆகஸ்ட் 8ம் தேதி இரவு 8 மணிக்கு புதுச்சேரி, எழில் நகரில் வசித்து வரும் அவரது சகோதரர் வீட்டை உடைத்து உள்ளே சென்று அவரையும், அவரது மனைவியையும் தாக்கியதாக புகார் எழுந்தது.

இதுபற்றி பாதிக்கப்பட்டோர் லாஸ்பேட்டை காவல்நிலையத்தில் புகார் அளித்தனர். இச்சம்பவம் தொடர்பாக ஆறு பிரிவுகளில் போலீஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். இந்த வழக்கு விசாரணை புதுச்சேரி முதலாவது குற்றவியல் நடுவர் மன்றத்தில் நடந்து வருகிறது. விசாரணைக்காக பல முறை வாய்தா வழங்கப்பட்ட போதிலும், மரிய வில்சன் தொடர்ந்து ஆஜராகாமல் இருந்து வருகிறார்.

கடந்த மாத வாய்தாவின் போதும் மரிய வில்சன் ஆஜராகவில்லை. இந்த நிலையில் குற்றப்பத்திரிகையையும் குற்றம்சாட்டப்பட்டோர் மீதான குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமாக புகார்தாரரால் சமர்ப்பிக்கப்பட்ட பென் டிரைவ்வைப் பெற நீதிமன்றத்தில் கட்டாயம் நேற்று (சனிக்கிழமை) ஆஜராக வேண்டும் என நீதித்துறை நடுவர் சேரலாதன் ஏற்கெனவே உத்தரவிட்டார்.

ஆனால் மரியவில்சன் நேற்று ஆஜராகவில்லை. அவரின் வழக்கறிஞர், தமிழகத்தில் பட்ஜெட் பணிகள் நடந்து வருவதால், மரிய வில்சனால் ஆஜராக முடியவில்லை என விளக்கம் அளித்தார். அதற்கு நீதிபதி, "சனிக்கிழமை, விடுமுறை நாள் என்பதால்தான் ஆஜராகும்படி கூறினேன். இப்போதும் ஆஜராகவிட்டால் என்ன செய்வது" என கேள்வி எழுப்பினார்.

அதைத் தொடர்ந்து வரும் 6ம் தேதி கண்டிப்பாக ஆஜராக வேண்டும் என கூறினார். அதற்கு கால நீட்டிப்பு கோரப்பட்டதையடுத்து வரும் 10ம் தேதி கட்டாயமாக நீதி மன்றத்தில் குற்றப்பத்திரிக்கையை பெற மரியவில்சன் ஆஜராக வேண்டும் என நீதிபதி உத்தரவு பிறப்பித்தார்.

# கொளத்தூர் பி.டி.சி.ரவி (எ) எஸ்.சிவக்குமார் இல்லத் திருமண விழா:

சென்னை, ஜூலை.6 –

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர், கழகத் தலைவர் மற்றும் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல்வாழ்த்துக்களுடன், சென்னை கிழக்கு மாவட்டம், கொளத்தூர் கிழக்குப் பகுதி, 68 (அ) வட்டக் கழகச் செயலாளரும், மாநகரப் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்கத் தலைவர் பி.டி.சி.ரவி (எ) எஸ்.சிவக்குமார் – எஸ்.ஆனந்தி ஆகியோரின் புதல்வர் டாக்டர் எஸ்.சபரிவாசனுக்கும், மதுரை மாவட்டம், கோ. வீரபத்திரன் – கோ.பார்வதி (எ) பவானி ஆகியோரின் புதல்வி டாக்டர் வி.கார்த்திகாராஜம் ஆகியோரின் திருமண வரவேற்பு விழா 11.07.2026 – சனிக்கிழமை, மாலை 6.30 மணிக்கு, மணவிழா 12.07.2026 – ஞாயிற்றுக்கிழமை, காலை 9 மணிக்கு மேல், சென்னை, ஜி.கே. எம்.காலனி, பேரறிஞர் அண்ணா திருமண மாளிகையில் நடைபெறுகிறது.

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

கழக அயலக அணித் தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, கழக சட்டத் திருத்தக் குழுச் செயலாளர் இரா.கிரிராஜன் எம்.பி, தலைமை செயற்குழு உறுப்பினர் ப.ரங்கநாதன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கொளத்தூர் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஐ.சி.எப்.வ. முரளிதரன், கொளத்தூர் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் எ.நாகராசன் எம்.சி, கே.சந்துரு, தேவஜவகர், சி.மகேஷ்குமார், எஸ்.பன்னீர்செல்வம் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இவ்விழாவில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சா.சி. சிவசங்கர் எம்.எல்.ஏ எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி, டி.கே.எஸ்.இளங்கோவன், அன்பகம் கலை, எஸ். ஆஸ்டின் எம்.எல்.ஏ., ப.தாயகம் கவி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தயாநிதி மாறன் எம்.பி., கே.ஆர்.பெரியகருப்பன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் எம்.எல்.ஏ., பி.வில்சன் எம்.பி., முனைவர் கோவி.செழியன் எம். எல்.ஏ., மேயர் பிரியா ராஜன், மாதவரம் எஸ்.சுதர்சனம், நே.சிற்றரசு எம்.சி., பி.டி.சி.செல்வராஜ், ஆர். பத்மநாபன், பூச்சி எஸ்.முருகன், துறைமுகம் காஜா, பொன்.தனபால் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

ஜி.சீனிவாசன், ஆர்.மோகன கிருஷ்ணன், ஆர்.செல்வராஜ் (எ) பாபு, பி.சுதர்சன் ஆகியோர் அனைவரையும் வரவேற்கின்றனர்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**தாம்பரம் வ. கன்னியப்பன்**

**ஜூலை 6 (2007)**



தாம்பரம் நகரக் கழகச் செயலாளராக இருபத்தைந்து ஆண்டுகள் சிறப்பாக பணியாற்றியவர்.

தாம்பரம் நகர்மன்றத் தலைவராக ஐந்தாண்டுகள் பணியாற்றி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

இந்தி எதிர்ப்பு, விலைவாசி உயர்வு எதிர்ப்பு, கறுப்புக் கொடி மற்றும் கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.